# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 238 ஆங்கீரச ஆடி 16 (31. 07 1992) வெள்ளி


## அரியாலை கடலில் மிதந்த கிரீஸ் கட்டிகள் !

கொழும்புத்துறை கிழக்கு மணியம் தோட்ட கடற்கரை யோரம் பகுதியில் நேற்று அதிகாலை பெரிய அளவில் உருண்டைகளான பொருள்கள் மிதந்துவந்தன. மக்கள் அச்சம் காரணமாக முதலில் இவற்றை எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. பின்னர் இவை மோட்டார் வாகனங்களுக்கு பாவிக்கப்படும் கிரீஸ் எனத்தெரியவந்ததை யடுத்து மக்கள் போட்டி போட்டு அவற்றை எடுத்து கிலோ 400 ரூபாவுக்கு விற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (47. 07)

# கிழக்கில் படையினரின் ரோந்து மாற்றியமைக்க நடவடிக்கை

## புலிகளின் கெரில்லா தாக்குதல்கள் காரணம் என்கிறார் இராணுவ அதிகாரி

கிழக்கில் அண்மைக்காலமாக அடுத்தடுத்து புலிகள் நடத்தும் தாக்குதல்களினால் இராணுவ அதிகாரிகள் நிலைதளைந்துள்ளனர். கிழக்கு மாகாணத்தில் இனிமேல் படையினரை சேவையில் ஈடுபடுத்தும் நடைமுறையில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக நேற்று கூட்டுப்படை தலைமையகத்தை சேர்ந்த கேணல் முனசிங்க செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கிழக்கில் திருப்புகளின் ரோந்து நடவடிக்கைகளும் ஏனைய நடவடிக்கைகளும் மாற்றம் செய்யப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என முனசிங்க குறிப்பிட்டார்.

கிழக்கில் படையினரின் ரோந்து அணிகளை தாக்கி விட்டு மறையும் கெரிலாப் பாணியை மேற்கொள்வது சுலபமாக உள்ளது என்றார்.

செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த கேணல் முனசிங்க வடக்கில் உள்ள நிலைமை வேறு. கிழக்கிலுள்ள நிலைமை வேறு. கிழக்கில் புலிகள் பரவலாக உள்ளனர். அவர்கள் கெரில்லா தந்திரத்தை உபயோகிக்கின்றனர். ஆனால் வடக்கில் புலிகள் சில பகுதிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர் என பதிலளித்தார்.

மற்றுமோர் கேள்விக்கு பதிலளித்த முனசிங்க கிழக்கில் புலிகளுக்கு எதிராக பாரிய நடவடிக்கை எடுப்பது சாத்தியமற்றது. புலிகள் கிழக்கில் அங்கும் இங்குமாக பரவலாக தாக்குதல் நடத்தி வடக்கிலுள்ள படையினரின் கவனத்தை திசை திருப்ப முயல்கின்றனர் என்றார்.

இராணுவத்தின் இக்கட்டான நிலை குறித்து கூட்டுப்படை தலைமையக பேச்சாளர் கேணல் முனசிங்க வெளிப்படையாக நேற்று கூறியமை கூட்டுப்படை தலைமைக்கும் முப்படை தளபதிகளுக்கும் இடையிலான பனிப்போரை காட்டுவதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## காயமடைந்தவரை ஏற்றவந்த ராணுவ ட்ரக்கும் தகர்ப்பு

மட்டக்களப்பு நாவலடியில் நேற்று முன்தினம் மாலை மீண்டும் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ ட்ரக் ஒன்று நாசமானது.

நேற்று முன்தினம் காலை நடைபெற்ற புலிகளின் அதிரடியில் காயமடைந்த படையினரை ஏற்றிச்செல்ல மேற்படி ட்ரக் மாலை 5.30 மணியளவில் வந்தபோதே ட்ரக் தகர்க்கப்பட்டது. இதில் பல படையினர் பலியாகினர்.

நாவலடியில் நேற்று முன்தினம் முன்னதாக காலை 60 படையினரை கொண்ட ரோந்து அணி புலிகளின் அதிரடியில் சிக்கி 30 படையினரை இழந்ததும் உதவிக்கு வந்த கவச வண்டி ஒன்று ரொக்கட் தாக்குதலில் சேதமாக்கப்பட்டதும் தெரிந்ததே.

## மீனவர்கள் மீது படையினர் சூடு

பூநகரி - கல்முனை இராணுவத்தினர் நேற்று காலை 8 மணியளவில் அரியாலை கிழக்கு பத்தடிப் பகுதியில் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் மீனவர்கள் எதுவித பாதிப்பும் இன்றி கரை வந்துசேர்ந்ததாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. 47

## ஹெலிகப்டர் சூட்டது

நேற்று காலை 8 மணியளவில் மண்டைதீவு பகுதியை பல தடவைகள் ஹெலி ஒன்று வட்டமிட்டு துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைவிட மண்டைதீவு இராணுவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. 47, 07

## வளலாய் பகுதியில் திடீர்ச் சத்தங்கள்

நேற்று முன்தினம் இரவு வளலாய் இடைக்காட்டுப்பகுதிகளிலிருந்து பலத்த இ

— 04ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ ஜீப் தேயிலையுடன் கண்ணிவெடியில் சிதறியது

மட்டக்களப்பு வாகனேரியில் நேற்று முன்தினம் இராணுவ ஜீப் வண்டி ஒன்று அமுக்க கண்ணிவெடியில் சிக்கியதில் ஓர் இராணுவ சிப்பாய் பலியானதாக கூட்டுப்படை தலைமையக பேச்சாளர் நேற்று தெரிவித்தார்.

படையினருக்கான தேயிலை விநியோகத்தை இந்த இராணுவ ஜீப் வண்டி மேற்கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

★ லங்கா தீபவிற்கு அரச அதிபர் தகவல்

## அகதி குடும்பங்களின் தொகை 5205 ஆல் அதிகரித்து விட்டது

"யாழ்ப்பாண மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர். இதற்கான அரசியல் தீர்வொன்று அவசியமாகும். இதற்காக கூடிய விரைவில் சமாதான பேச்சுக்களை வெற்றிபெற செய்ய உண்மையான முயற்சிகள் செய்யப்படவேண்டும்" இவ்வாறு யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் சிங்கள தினசரியான லங்கா தீப"விற்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

யாழ்மாவட்டத்தில் தொலை தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. கொழும்பு செல்வதே சிரமமாகி விட்டது. மின்சாரம் இல்லை. ரேடியோ கேட்க பற்றறியும் இல்லை. இதனால் அரசின் அறிவிப்புகளை கூட அறியமுடியாதுள்ளது.

யாழ் மாவட்டத்தில் முன்னர் 65,174 அகதி குடும்பங்கள் இருந்தன. அண்மையில் நடைபெற்ற மூன்று இராணுவ நடவடிக்கைகளால் இத்தொகை 70 379 ஆக உயர்ந்துள்ளது. அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என திரு. மாணிக்கவாசகர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்தார். 47

★ ஐலண்ட் பத்திரிகை தெரிவிப்பு

## ஆயுதங்களை போட்டுவிட்டு ஓடுவதில்தான் படையினர் கவனம்

புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி போர்முனை செல்ல மறுக்கும் இராணுவ சிப்பாய்கள் தமது காலில் துப்பாக்கியால் சுட்டுக்கொள்கின்றனர். படையினர் தாக்குதலுக்கு உள்ளாகும் போது தமது ஆயுதங்களை போட்டுவிட்டு ஓடுவதிலேயே கவனமாக இருக்கின்றனர். இவ்வாறு ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அண்மைய இராணுவத்தின் போக்கு இதையே காட்டுகிறது. போரினால் உளரீதியாக பாதிக்கப்பட்ட படையினருக்கு அதிகாரிகள் வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய போதிலும் அவர்கள் தம்மைத் தாமே சுட்டு காயப்படுத்துவதை அவற்றை ஏற்க்கொள்ள படையினர் தயாரில்லை என்பதையே காட்டுகிறது. என ஐலண்ட் மேலும் குறிப்பிட்டுள்ளது.

★ அரச எதிர்ப்பு அடுத்த நடவடிக்கை

## பாதயாத்திரை மனிதச் சங்கிலிப் போராட்டம் 100கூட்டங்கள் - சுதந்திரக்கட்சி ஏற்பாடு

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் அரச எதிர்ப்பு பிரசாரத்தின் அடுத்த நடவடிக்கையாக கண்டிக்கான பாதயாத்திரை இரத்தினபுரியும் புரிசமன்தேவாலயம் வரை இடம் பெறவுள்ள மனித சங்கிலிபோராட்டங்களுக்குமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரை இடம்பெற்ற வாகன யாத்திரை வெற்றியளித்ததாக கருதும் அநுரா பண்டாரநாயகவும் மகிந்த ராஜபக்ஷவும் மேற்படி இரண்டு போராட்டங்களுக்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வாகன யாத்திரைப்போராட்டத்தின் இறுதியில் அநுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தொகை 1950ல் எஸ். டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக அங்கு விஜயம் செய்த போது இருந்ததற்குப்பின் இப்பொழுதுதான் இவ்வளவு பிரமாண்டமானதாக இருந்தது என மைத்திரிபால சேனநாயகவும், கே. பி. இரத்நாயகவும் கூறியுள்ளனர். இ

— 04ஆம் பக்கம் பார்க்க

## யூ. என். எச். சி. ஆர்க்கு 10 லட்சம் டொலர் உதவி

இந்தியாவிலிருந்து இலங்கை தமிழ் அகதிகளை திருப்பியனுப்பும் நடவடிக்கைக்கு கனடா, அமெரிக்கா பிரான்ஸ் ஆகிய நாடுகள் நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளன.

அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலய கோரிக்கைக்கு அமைய நாடுகள் மேற்படி அமைப்பிற்கு 10 லட்சம் அமெரிக்க டொலர்களை அளிக்க முன்வந்தன.


நீர் தேங்க நிலம் சிரிக்கும்

நிலம் சிரிக்க நீ செழிப்பாய்

# 12 சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம்

யாழ். செயலகத்தில் கடமையாற்றும் 12 சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த 12 சிற்றூழியர்களுக்கும் சேவையை உறுதிப்படுத்துவதற்கான கடிதங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

இதைவிட சிற்றூழியர் தரத்தில் உள்ள ஐந்து பேர் சிற்றூழியர் தரம் இரண்டுக்கு பதவியுயர்த்தப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (47)

# வெளிநாட்டுப் பிரஜைகளானோர் வைப்புகளை மீளப்பெற அனுமதி

வெளிநாடுகளில் நிரந்தர வதிவிட மற்றும் பிரஜா உரிமையைப் பெற்றுக் கொண்ட இலங்கையர்கள் இங்குள்ள வங்கிகளில் வைப்புச் செய்துள்ள பணத்தை தற்போது மீளப்பெற நிதி அமைச்சு அனுமதியளித்துள்ளது.

வெளிநாடு சென்ற பிரஜாவுரிமை பெற்ற இலங்கையர்கள் தாம் இங்கு வைப்பிலிட்ட பணத்தை மீளப் பெறமுடியாது கடந்த 5 வருட காலமாக முடக்கி வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# உலகின மிகச் சிறிய வாகன தொலைபேசி அறிமுகம்

நியூசிலாந்து நாட்டின் மோட்டோரோலா நிறுவனம் 1992 இல் உற்பத்தி செய்துள்ள "மைக்ரோ ரெக்-2" உலகில் மிகவும் சிறியதும், அதிகம் முன்னேற்றமடைந்ததுமான வாகன தொலைபேசி எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் எடை ஏழரை அவுன்சுகள் மாத்திரமே. இதே போன்ற முன்னைய உற்பத்தியின் எடை பன்னிரண்டரை அவுன்சுகள் ஆகும்.

இந்த புதிய தொலைபேசி எதுவித சிரமமுமின்றி சட்டைப் பைக்குள் எடுத்துச் செல்லக் கூடியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கெரில்லா அமைப்புகளுடனான தொடர்புகள் பற்றி விசாரணை

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அரச படைகளுடன் தீரத்துடன் சளைக்காது போராடி வரும் விடுதலைப் புலிகளுக்கு வெளிநாட்டு கெரில்லா அமைப்புகளிடமிருந்து ஆயுத உதவி கிடைக்கின்றனவா? இப்படியொரு சந்தேகம் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சுக்கு இப்போது எழுந்துள்ளது என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக விசேட விசாரணைகள் தற்பொழுது நடத்தப்படுவதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.


# சேரிப்புற வாசிகளுக்கு தொடர் மாடிகள் கிடைக்கும்

கொழும்பு மாநகரப் பகுதியிலுள்ள சேரிப்புற வீடுகள் அனைத்தையும் அகற்றிவிட கொழும்பு மாநகர சபை தீர்மானித்துள்ளதாக கொழும்பு மாநகர பிரதிமேயர் கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த சேரிப்புற வீடுகள் அழிக்கப்பட்டு, அவ்விடத்தில் தொடர்மாடிகள் அமைக்கப்பட்டு அவை சேரிப்புற குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.


## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 — 04 — 1913



உதிர்வு 31 — 07 — 1991

### அமரர் வீ.எம். கணபதிப்பிள்ளை

(உரிமையாளர் வீ. எம். கே. நகைமாளிகை கண்டி வீதி, சாவகச்சேரி)

ஆண்டொன்று சென்றதையா-ஆனாலும்
எம் உள்ளத்தில் என்றும்
ஒளி வீசும் தெய்வமாக நிலைத்து நிற்கும்
எங்கள் அன்புத் தந்தையை என்றும்
பூஜிக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

V. M K. நகை மாளிகை
கண்டி வீதி,
சாவகச்சேரி. 07065


# ★ கிழக்கு முஸ்லிம் கொலைகள்
# ஜனநாயக நீரோட்டத்திலிணைந்த குழுமீதும் அஷ்ரப் சந்தேகம்

கிழக்கில் சமீபகாலத்தில் முஸ்லிம்கள் தொடர்ந்து கொல்லப்பட்டுவரும் சம்பவங்களில் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொண்டதாகக் கூறிக்கொள்ளும் ஆயுதம் தாங்கிய தமிழ்க் குழுவொன்றும் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தமக்குத் தெரிய வந்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய் சாய்ந்தமருதில் முஸ்லிம் காங்கிரஸின் பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அஷ்ரப் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை மட்டக்களப்பு பூனச்சிமுனைப் பகுதியில் முஸ்லிம் மீனவர்களை நிலைமை வழமைக்குத் திரும்பும்வரை கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவேண்டாமென வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மன்சூர் கேட்டுள்ளதாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## இளைஞர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு சின்ன ஊரணி என்ற இடத்தில் நேற்று முன்தினம் காலை தமிழ் இளைஞர் ஒருவர் விசேட பொலிஸ் புலனாய்வுப்பிரிவினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

## சிங்கையில் தொண்டா உரை

அமைச்சர் தொண்டமான் விரைவில் சிங்கப்பூர் செல்லவுள்ளார்.

அவர் அங்கு 'இலங்கையின் இன உறவுகள் - இன்றைய நிலையில்' என்னும் பொருள் பற்றியும் உரையாற்றவுள்ளார்.

## நஷ்டஈடு வழங்கப்படும்

கொக்கட்டிச் சோலையில் படுகொலைசெய்யப்பட்டோர் பாதிக்கப்பட்டோருக்கான நஷ்ட ஈடுகள் அடுத்தவாரம் மட்டக்களப்பு செயலகத்தின் மூலம் வழங்கப்படவுள்ளன.

இதற்குரிய 130 காசோலைகள் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து மட்டு. செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

## ஐ. நா. அகதிகள் அலுவலகம் தமிழகத்தில் திறக்கப்படும்

ஈழத்தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதைக் கண்காணிக்க ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் தமிழகத்தில் கிளை அலுவலகமொன்றைத் திறக்கவுள்ளது.

இந்தியாவும் - ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயமும் இது தொடர்பில் ஜெனீவாவில் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளன.

## சிறுதானியங்களை நியாய விலையில் செயலகம் கொள்வனவு செய்யும்

கடந்த திங்கள் கிழமை யாழ் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், சிறுதானியங்களை சந்தைப்படுத்துவதில் உற்பத்தியாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்தும், அப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏற்ற வழி வகைகள் குறித்தும் ஆராயப்பட்டன.

சமநலசேவை நிலைய அதிகாரிகள், உதவி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்), மற்றும் யாழ் செயலக அதிகாரிகள் கலந்து கொண்ட இக் கலந்துரையாடலில் சிறுதானியங்களுக்கு நியாயவிலை ஒன்றை நிர்ணயித்து, அதன்படி அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான ஒழுங்குகளை யாழ் செயலகம் மேற்கொள்ளுமெனவும் இதற்கான நடவடிக்கைகளை யாழ் செயலக அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது சிறுதானிய உற்பத்தியாளர்கள் சிறுதானியங்களை சந்தைப்படுத்துவதில் பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## 18 மாவட்டங்களில் 140 முகாம்களில் 90 ஆயிரம் ஈழ அகதிகள்

தமிழகத்திலுள்ள அகதிகளை இலங்கைக்குத் திருப்பியனுப்பும் நடவடிக்கைகள் அடுத்தமாதம் 3 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அன்றையதினம் 125 அகதிகள் விமான மூலம் திருமலை சீனன்குடா விமான நிலையத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள்.

ஒரு நாளைக்கு நான்கு விமானங்கள் என்ற அடிப்படையில் வாரத்தில் இரண்டு நாட்களுக்கு இந்த விமான சேவை நடத்தப்படவுள்ளது.

இதேவேளை இராமேஸ்வரத்திலிருந்து கப்பல் மூலம் சுமார் 800 அகதிகள் ஆகஸ்ட் 10 ஆம் திகதி தலைமன்னாருக்கு கூட்டிவரப்படவுள்ளனர்.

இவ்வாண்டு ஜனவரி முதல் மே வரை 23100 ஈழத் தமிழ் அகதிகள் தமிழகத்திலிருந்து கப்பல்மூலமும் விமானமூலமும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 90 000 அகதிகள் தமிழ் நாட்டிலுள்ள 18 மாவட்டங்களில் 140 முகாம்களில் தங்கியுள்ளனர்.

## நாயன்மார்கட்டு

1966 இல் கோயிற் புனருத்தாரணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்க வேண்டியேற்பட்டது 1971 இல் புனருத்தாரண கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றதுடன் மூன்று நாள்கள் திருமுறை விழாவும் நடைபெற்றதோடு கும்பாபிஷேக மலர் வெளியீடும் இடம்பெற்றன. இக்காலகட்டத்தில் ஆலயப் பரிபாலன சபையில் இடம்பெற்றோர்

தலைவர்:- திரு. ச. பொன்னையா.

உபதலைவர்: திரு. சு. பரநிருபசிங்கம்

செயலர்: திரு வெ. சந்தையா

உபசெயலர்: திரு. க. சிவராசா

பொருளர்: திரு இ. சரவணமுத்து

செயற்குழுவினர் அறுவர்.

இவர்களின் பணிகளுக்கு ஆலயத் திருப்பணிச் சபை நாயன்மார்கட்டு சைவ அபிவிருத்திக் கழகம், நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகம் ஆகியன தோளோடு தோள் நின்று உறுதுணை புரிந்தன.

பல பெரியார்களும் அடியார்களும் ஆலய வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் காலத்துக்குக்காலம் துணை நின்றனர். அரும் பணிகள் புரிந்தனர். அவற்றின் விவரம்:

(1) விநாயகர் ஆலய அமைப்பு
திரு செ. சிவகுருநாதன்

(2) முருகன் ஆலய அமைப்பு
திரு. ச சதாசிவம்

(3) வைரவர் ஆலய அமைப்பு
திரு ஆ. நவரத்தினம்

(4) சண்டேஸ்வரி ஆலய அமைப்பு
வைத்திய கலாநிதி இ இராசமுத்தையா

(5) தீர்த்த மண்டப அமைப்பு
திரு. சு பரநிருபசிங்கம்

(6) யாகசாலை புனருத்தாரணம்
திரு. வே இராதாகிருஷ்ணன்

(7) வசந்த மண்டபப் புனருத்தாரணம்
திரு ம. மகேஸ்வரன் அவர்களின் உதவியுடன் ஆரம்பித்து வைக்கப் பெற்றது

(8) ஆலயக் குருக்கள் வதிவிடத்துக்கு வேண்டிய வீடும் வளவும்
ஊர் வாழ் மக்களின் நன்கொடை

(9) நவக்கிரக தேவர்களுக்கான ஆலய அமைப்பு
அடியார்கள் ஒன்பதின்மர்களின் அன்பளிப்பு

(10) சிவாலயம் பிரதிட்டை
திரு கோ. தயாநிதி

(11) உமாதேவியாலயம் பிரதிட்டை
திரு ஆ தம்பிஐயா

(12) யாகசாலை அருகில் உள்ள அறை
திரு கோ ஸ்ரீபாலன்

இவ்வாறான ஆலய விரிவாக்கப் பணி நடைபெற்று வந்த காலப்பகுதியில் ஆலய நிர்வாக சபையிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன.

சபைத் தலைவர் திரு ச. பொன்னையா அவர்களின் மறைவைத் தொடர்ந்து திரு சு. பரநிருபசிங்கம் அவர்களும் செயலர் திரு வெ. சந்தையா அவர்களின் மறைவைத் தொடர்ந்து திரு. ச. சதாசிவம் அவர்களும் முறையே தலைவர் செயலாளராகச் சபையினால் தெரிவாகினர். ஆலயம் ஆன்மீகத் துறையிலும் நன்கு முதிர்ந்து வளர்ந்து வந்தது. அதன் வளர்ச்சியில் நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தினரும் தண்ணீர்ப்பந்தல் சபையினரும் தங்களது பங்களிப்பை ஆற்றி வந்தனர்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. சு பரநிருபசிங்கம் அவர்களின் திடீர் மறைவுக்குப் பின்னர் திரு. ச. பொ. பாலசிங்கம் அவர்கள் தலைமையேற்று கோவில் பணிகளை உற்சாகத்துடன் நிறைவேற்றி வந்தார். எனினும் சிறிது காலத்தில் அவர் வெளிநாடு சென்றமையால் திரு. தி. தருமலிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப் பெற்றுப் பணியாற்றி வருகின்றார் செயற்குழு காலத்துக்குக்காலம் ஏற்படும் வெற்றிடங்கள் ஆலய பரிபாலன சபையால் நிரப்பப் பெற்று அன்றாடக் கிரியைகளும் திருப்பணி வேலைகளும் தங்கின்றி நடைபெற்று வருகின்றன.

# நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேய்ச்சியம்பாள்

# தேர் உற்சவம் 31 . 7 . 92 (வெள்ளி)

## நின்துணையே நாடுகிறோம்

நல்லவர்கள் நாடிவரும் நாயன்மார் கட்டிலுறை
நாயகியே! சிவனாரின் பாகமெனத் திகழ்பவளே!
வல்லவளே! நின்புகழே நிதம்பாடி வணங்குகிறோம்
வையகத்தின் மக்களெலாம் வளமுடைய வாழ்வுபெற
நாலனவே நடந்திடவும் நெஞ்சமது நிறைந்திடவும்
நின் துணையே தேடுகிறோம் எமையின்று
வாட்டுகின்ற
அல்லலெலாம் அகன்றிடவும் அமைதியது நிலவிடவும்
அருள்புரிவாய் வண்ணமிகு தேரேறும் ஈஸ்வரியே!

நாயன்மார்கட்டு — ப. மகேந்திரதாசன்

## சேர்க பேரின்பிற்சிறந்து

க. சொக்கலிங்கம் (சொக்கன்)
(தலைவர் சைவ அபிவிருத்திக் கழகம்,சைவ சமய அபி
விருத்திக் கழகம் நாயன்மார் கட்டு)

ஆச்சியாம் பேய்ச்சி அருளாட்சி யாண்மீட்சி
வாய்ச்ச செவ்விழிக ளாறாய்நீர்—பாய்ச்சியவள்
தேரில் அமர்ந்துலாச் சீர்காண்போர் தீதறுத்துச்
சேர்கபே ரின்பிற் றிளைத்து

---

வாழ்கநம் நாடிது வாழ்கநம் மக்களும்
வாழிய வாழிய வாழியவே
ஆழ்க துயர் தொல்லை அத்தனையும் அன்னை
அன்பிப பொழியுமிக இணையிலே

— நாயன்மார் நாதன்

---

நின்னருள் வேண்டுகின்றோம் - எங்கள்
நீதியுந் தர்மமும் நிலைப்பதற்கே
பொன்னவிர் கோயில்களும் — எங்கள்
பெற்றுடை மாதரும் மதலையரும்
அன்னநல் அணிவயல்கள் — எங்கள்
ஆநிரை மாடுகள் குதிரைகளும்
இன்னவை காத்திடவே — அன்னை
இணை மலர் திருவடி சரண்புகுந்தோம்

—பாரதியார்

## என்றும் காத்து நிற்கும் சக்தி

இராகம் : மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

அம்மையவள் அமர்ந்துவந்தாள் அழகான தேரினிலே
அடியவர்க்கு அருள்பொழிய ஆர்வமுடன்தேரினிலே
பேய்ச்சி
(அம்மையவள்)

அநுபல்லவி


இம்மையிலும் மறுமையிலும் இன்பவாழ்வளித்திடவே
நம்மையென்றும் காத்துநின்று-நற்கதியைத் தந்திடவே
(அம்மையவள்)

சரணம்

பக்தியுடன் வடம்பிடித்துச் செந்தமிழ்ப்பா மலர்
தொடுத்துச்
சக்தியுந்தன் பதம்பிடித்துத் தொழுமடியார்
கரமெடுத்துச்
சித்திமிக்க வாழ்வருளச் சிறப்புடனே வீற்றிருந்து
வித்தகியாம் பேய்ச்சியம்மை விளங்கு புகழ்க்
காட்சிதந்து
(அம்மையவள்)

நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்

## பேய்ச்சி அன்னையின் பேரருட் பிரவாகம்



யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்திலேயே புகழ் பூத்து விளங்கிய பழம்பெரும் நாயன்மார்கட்டுப் பதியில் வாழ்கின்ற சைவமக்களின் இடரினுந் தளரினும் அவர்கள் தம உறநோய்கள் தவிர்த்து அருளாட்சி நடத்திவருபவள் பேய்ச்சி அன்னையாம் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி.

இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் முருகர் என்பவர் அம்பாளின் திருமுகத்தை மரத்தால் அமைத்து இன்றுள்ள ஆலயவளவிற் சிறு கொட்டில் ஒன்றில் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்தார். 1918 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் அத்திருமுகம் மண்ணுள்ளே புதையுண்டு போயிற்று. ஆனால் வெள்ளம் வற்றி வடிந்த பல காலத்தின் பின்னரும் அது அன்னையின் பேரருளால் எவ்வித சிதைவுமின்றி வெளிக்கொண்டுவரப்பட்டது.

அவ்வமயம் கோயில் பரிபாலனத்தைப் பொறுப்பேற்றிருந்த திருகணசபை என்ற பெரியார் ஊர்வாழ் மக்களின் உதவியுடன் பத்தாண்டுகள் மூவன்று கொட்டிலைச் சிறுகோயிலாக்கினார் ஊர்மக்களின் உணர்வினையும், பக்தி

திருநாவுக்கரசு
கமலநாதன்

யினையும் புரிந்துகொண்ட அவர் கோயிலை மக்கள் உரிமையாக்க மனங்கொண்டார்

அதற்கமைய அமைந்த பரிபாலனசபையில் நாயன்மார்கட்டின் மும்மணிகளாக கிளிர்ந்த வைத்திய கலாநிதி ஒ இராமநாதன், சோதிடபூஷித சம்பந்தர், ஆசிரியமணி வெ கந்தையா ஆகியோர் முறையே தலைவர், உப-தலைவர், செயலர் என்ற பதவிகளை (1932) ஏற்று ஆலய வளர்ச்சிக்குப் பணியாற்றினர், இவர்களுடன் ஒன்பதின்மர் கொண்ட குழுவும் இருந்தது சபை காவலர் திருவாளர் அ. ஆறுமுகம் அவர்களைக் கோயில் அர்ச்சகராக நியமித்தது,

ஊர்மக்கள் ஆதரவுடனும், சபையின் அயரா உழைப்பினாலும் ஆலயத் திருப்பணி வேலைகள் சிறப்புற நிறைவேறி ஸ்ரீமுக வருடம் சித்திரை மாதத்தில் மகா கும்பாபிடேகம் இனிதே நிறைவேறியது. 1954 ஆம் ஆண்டு தொடக்கம் கொடியேறித் திருவிழா நடைபெறுவது வழக்கமாயிற்று.

02ஆம் பக்கம் பார்க்க

## அமைதி தோன்றட்டும்

நாம் நாயன்மார்கட்டுப் பதியில் கோயில் கொண்டிருக்கும் அருள் மிகு இராசராசேஸ்வரி பேச்சியம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் பத்தாவது தினமான இன்று அம்பிகை இரதமேறிப் பவனி வரும் கண்கொள்ளாக் காட்சி அடியார்களின் உள்ளத்தைப் பூரிப்படையச் செய்யும். இப் பதியில் உள்ள மக்களுக்கு அருள் பாலித்துக் காக்கும் தாயாகிய பேச்சி அம்பாளின் அருட் கடாட்சம் கிடைத்து எம்மவர் வாழ்வில் அமைதி தோன்றிட பிரார்த்திப்போமாக

தி தருமலிங்கம் தலைவர்
ஆலய பரிபாலனசபை.

## பராசக்தியினைப் பணிவோம்

அன்னை உலகில் உள்ள உயிர்கள் அனைத்தின் வடிவமாயும் அனைத்தையும் ஆள்பவளாயும் அனைத்துச் சக்திகளும் பொருந்தியவளாயும் விளங்குகின்றாள். கருணையின் சொரூபியாயும் கருணை மழை சொரிந்து கொண்டிருப்பவளும் வேண்டிய வரங்களை வழங்குபவளாயும் அன்னை இலங்கின்றாள், உலகில் சூழ்ந்திருக்கும் சகல பயங்களிலும் இருந்து எங்களைக் காத்தருளுபவள் அன்னை பாராசக்தியே இராமகிருஷ்ண பரமஹம்சர் சங்கராச்சாரியார் போன்ற பெரும் ஞானிகளே கடவுளைச் சக்தியின் வடிவிலே கண்டார்கள் தாய் தான் இலகுவில் இரங்குபவளும் அணைத்துக் கொள்பவளும் ஆவாள் எனவே நாம் அன்னை பராசக்திமீது பக்தியை வளர்த்து சாந்தியும் சந்தோஷமும் உடையவர்களாய் வாழ்வோமாக.

ச சதாசிவம்
செயலர்
ஆலய பரிபாலன சபை

## அருள் தருவாய் அம்பிகையே!

எமது மக்களின் வாழ்விலும் தாழ்விலும் வற்றாத அருள்வாரி வழங்கிக் காக்கும் அன்னையாம் பேய்ச்சியம்மை இன்று அடியார் மனங்குளிர அழகு தேரில் வருகின்றாள். இத் திருக் காட்சியைக் காண்கின்ற மனதால் நினைக்கின்ற அடியார் அனைவரும் அன்னையின் அருட் கடாட்சம் பெற்றுச் சகல சௌபாக்கியங்களுடனும் வாழப் பிரார்த்திக்கின்றோம்.

இ.ஸ்ரீகந்தபாலன் தலைவர்
நாயன்மார்கட்டு
சனசமூகநிலையம்

## சக்தியின் பாதம் சரணடைவோம்

சகல புவனங்களையும் தன் கருணையால் காத்து இரட்சிக்கும் அன்னை பேய்ச்சி அம்பாள் துஷ்டரை நிக்கிரகம் செய்து அடியார்களுக்கு அருள்பாலித்தற் பொருட்டு இன்று தேரூர்ந்து வருகின்றாள், வாழ்க்கை வரும் இடர்களையும், துயர்களையும் நீக்கும் பேரருள் சக்தியிடமே உண்டு. அந்த மகாசக்தியாம் பேய்ச்சியைப் பணிந்து, இன்புற்று வாழ்வோமாக!

க. சுரேஷ்குமார்
தலைவர்
தண்ணீர்ப்பந்தல் சபை

## நன்றி

அன்னையின் அருள் மலர் அழகுற வெளிவர உதவிய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் 'முரசொலி' நிறுவனத்தினருக்கும் எமது உளம் நிறை நன்றிகள்.

-மலர்க்குழு

## இரதோற்சவம்

சொக்கன்

ஆலயங்களில் நாடோறும் நடைபெறும் பூசைகளில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்தற் பொருட்டும், மக்களுக்கு இறைவன் தானே எழுந்தருளித் திருவுலாப் போந்து அருள்பாலித்தற் பொருட்டும் ஆண்டுதோறும் ஆலயங்களில் மகோற்சவமாகிய பெருவிழாக்கள் இடம்பெறுகின்றன

கொடியேற்றம் படைத்தலையும் வாகனத் திருவிழாக்கள் காத்தலையும் இரதோற்சவமாகிய தேர்த்திருவிழா அழித்தலையும் பிட்சாடனர் உற்சவம் (இது சிவாலயங்களிலேயே நடைபெறும்) மறைத்தலையும் தீர்த்தத்திருவிழா அருளலையும் குறிப்பன.

அழித்தல் என்பது ஆன்மாக்களின் பிறப்பை ஒழித்து அவற்றைச் சிலகாலம் ஆறியிருக்கச் செய்வதாகும் இறைவனின் ஐந்தொழில்களிலே அது முக்கியமான ஒன்றே. இதனாலேயே

''தோற்றிய திதியே ஒடுங்கி'' எனச் சிவஞானபோதம் அழித்தற்றொழிலின் அருமைப் பாட்டை எடுத்துரைக்கும்.

எனவே ஆலயங்களிலே நிகழும் இரதோற்சவத்தைத் தரிசித்து எமது மலநீக்கத்துக்காய் இறைவனைப் பிரார்த்தித்தல் எமது இன்றியமையாக் கடனாகும்.

## அன்னையின் ஆலயத்தைத் தரிசித்த அருளாளர்கள்

நல்லைநகர் தந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும், அவரது சீடர்களில் ஒருவரான அம்பலவாண நாவலர் அவர்களும், ஈழத்துச் சித்தர்களாகத் திகழ்ந்த கடையிற் சுவாமிகள் அம்பலவாணர் சுவாமிகள், குழந்தைவேல் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், சிவயோகச்செம்மல் யோகர் சுவாமிகள் அவர் வழிவந்த குடைச்சாமியார் என்ற கந்தையாச் சாமியார் ஆகியோர் தாங்கள் வாழ்ந்த காலங்களில் அவ்வப்போது அன்னையின் சந்நிதிக்கு வந்து தரிசித்து அடியார்களுக்கு ஆசியும் வழங்கியுள்ளார்கள்.

நாயன்மார் நாதன்

## தேரேறும் தேவியருள் பெற்றிடத் தொழும் அன்பர்கள்


பூபாலசிங்கம் புத்தகசாலை

அம்பிகை அடியார்

ரவர் கோப்பி அன் கூல் பார்

துரையப்பா பத்தர் இராஜகோபால்

பரிமளா ஸ்ரோர்ஸ்

திருப்பதி ஸ்ரோர்ஸ்

ரி. கனகசுந்தரம்

கலாஜோதி மில்ஸ்

க. செ கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

மில்க்வைற் MILKWHITE

ஆலய பரிபாலன சபையின் முன்னாள் தலைவர் அமரர் சு. பரநிருபசிங்கம் சேவையினை நினைவூட்டும்

மில்க்வைற்

## பார்ஸிலோனா ஒலிம்பிக் - 92
### பதக்க விவரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சி. ஐ. எஸ் முன்னாள் சோவியத் குடியரசுகள் | 15 | 07 | 05 |
| அமெரிக்கா | 08 | 06 | 08 |
| சீனா | 06 | 09 | 02 |
| ஹங்கேரி | 05 | 04 | 01 |
| தென்கொரியா | 04 | — | 01 |
| ஜேர்மனி | 03 | 02 | 06 |
| ஸ்பெயின் | 02 | — | — |
| ஜப்பான் | 01 | 02 | 03 |
| பல்கேரியா | 01 | 04 | 02 |
| அவுஸ்திரேலியா | 01 | 02 | 03 |
| பிரிட்டன் | 01 | 01 | 02 |
| கியூபா | 02 | 01 | 01 |
| துருக்கி | 01 | — | — |
| பிரான்ஸ் | — | 03 | 06 |
| இத்தாலி | — | 03 | 04 |
| சுவீடன் | — | 03 | 03 |
| நோர்வே | 01 | 01 | — |
| போலந்து | 3 | 02 | 01 |
| பிரேசில் | — | 01 | — |
| ருமேனியா | — | 01 | 03 |
| பேரு | — | 01 | — |
| லத்வியா குடியரசு | — | 01 | — |
| நெதர்லாந்து | — | — | 03 |
| சுயேட்சை (யூகோ.) | — | — | 02 |
| பெல்ஜியம் | — | — | 01 |
| கனடா | — | — | 01 |
| பின்லாந்து | — | — | 01 |
| மங்கோலியா | — | — | 01 |
| சூரினாம் | — | — | 01 |
| நியூசிலாந்து | — | — | 01 |

## போதைப்பொருள் பாவனை 3 பிரிட்டிஷ் வீரர்கள் வெளியேற்ற[ம்]

பார்ஸிலோனா ஒலிம்பிக்கில் முதற் தடவையாக போதைப் பொருள் பாவித்த குற்றச்சாட்டில் மூன்று வீரர்கள் ஒலிம்பிக்கை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பிரிட்டனைச் சேர்ந்த பிரபல தடகள விளையாட்டு வீரர் ஜேசன் லிவிங்ஸ்ரோன், பளு தூக்கும் வீரர்களான அன்டு டேவிட்சன், அன்ரு சக்ஸரன் ஆகிய மூவருமே போதைப் பொருள் உட்கொண்டமை சோதனையில் கண்டு பிடிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டவர்களாவர்.

இதனிடையே போதைப் பொருள் பாவனை கண்டுபிடிக்கப்பட்டு அவர் பெற்ற தங்கப் பதக்கத்தையும் கடந்த முறை இழந்த கனேடிய நீச்சல் ஓட்ட வீரர் பென் ஜோன்சன் இன்று போட்டியில் பங்குபற்றவுள்ளமை இன்றைய முக்கிய நிகழ்ச்சியாக அமையவுள்ளது.

நேற்று தும்பாக்கிச் சுடும் போட்டியில் மகளிர் பிரிவில் சி. ஐ. எஸ். எனப்படும் முன்னாள் சோவியத்தின் வீராங்கனை பரலோ விஜமலிக் என்பவரும் ஆண்கள் பிரிவில் ஜேர்மனியர் ஒருவரும் ஒலிம்பிக் சாதனையை ஏற்படுத்தி தங்கப்பதக்கங்களைப் பெற்றனர்.

ஹொக்கியில் இந்தியாவை பிரிட்டன் 3:1 என்ற கோல் கணக்கில் முறியடித்தது இதனால் அரையிறுதிப்போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பு இந்தியாவிற்கு மந்தமாக உள்ளது. பாகிஸ்தான் முன்னாள் சோவியத்தை 6:4 என்ற கோல் கணக்கில் முறியடித்து அரையிறுதி போட்டியில் பங்குபற்றும் வாய்ப்[பை] பெற்றுள்ளது.

ஆண்களுக்கான கரப[ந்]தாட்டத்தில் ஜப்பானை இ[த்]தாலி வெற்றி கொண்ட[து.] நீச்சல் போட்டியில் சி.ஐ.எ[ஸ்] எனப்படும் முன்னாள் சோ[வி]யத் மற்றுமோர் உலக[ச்] [சா]தனையை ஏற்படுத்தி த[ங்கம்] பெற்றது.

### ● மனித உரிமை மீறல் வழக்கு
## பொலிஸாருக்கெதிராக தீர்ப்பு நட்டஈடு வழங்க பணிப்பு

எம்பிலிப்பிட்டி கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் காவல் கடமையில் ஈடுபட்ட பொலிஸார் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக புகார் செய்த அக் கூட்டுத்தாபனத்தின் பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் ஜே. வி. பியுடன் தொடர்புடையவரென்று குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

கரந்தெனியாவைச் சேர்ந்த எச் டபிள்யூ எம் வித்தியாமணி என்னும் இந்த பிரதம பாதுகாப்பு அதிகாரி மனித உரிமைமீறல்களுக்கெதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கை விசாரித்த நீதியரசர் குலதுங்காவும் ஏனைய இரு நீதியரசர்களையும் இவர் கைது செய்த தடுப்புக்காவலில் வைக்கப்பட்டது சட்ட[வி]ரோதம் எனத் தீர்ப்பளித்[த]துடன் அரசாங்கம் முப்ப[த்]தையாயிரம் ரூபா நட்டஈடு வழங்க வேண்டுமெனவும் கட்டளையிட்டுள்ளது.

இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய உயர் நீதிமன்றம், தமது முன்னைய தீர்ப்புகளை கவனத்திற் கொள்ளாது தொட[ர்ந்]தும் மனித உரிமைகள் நடவடிக்கைகளில் இறங்கி வரும் பொலிஸாரை ஈடுபடுவதை கடுமையாக கண்டித்துள்ளது.

மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட பொலிஸாருக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபரையும் உயர் நீதிமன்றம் பணித்துள்ளது.

### ஒப்படைக்க வேண்டாம்
## விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்

எழுதுவினைஞர் சேவைக்கான போட்டிப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் செயலகத்தில் ஒப்படைக்க வேண்டாம் என யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் மீண்டும் வலியுறுத்தி கூறியுள்ளார்.

இந்த விண்ணப்பங்கள் செயலகத்தில் வைத்து ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் அரசாங்க அதிபர் செயலகம் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதுவினைஞர் சேவைக்கான போட்டிப்பரீட்சை என குறிப்பிடல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றும் பலர் விண்ணப்பங்களை செயலகத்தில் ஒப்படைக்க வந்து திரும்பி சென்றதை காணமுடிந்தது. 47

## உறுப்பினர் மீது தாக்கு
## ந. ச. ச. கட்சி கண்டனம்

வடமத்திய மாகாணசபையின் நவசமசமாஜக் கட்சி உறுப்பினர் அச்சபையின் முதலமைச்சரால் தாக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதை நவசமசமாஜக் கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது. மேலும் இப்படியான நிலைக்கு ஐ. தே. கட்சியே பொறுப்பு என்றும் தொழிற் சங்க நடவடிக்கைகள் வன்முறை மூலமும் அடாவடித்தனமாகவும் பயமுறுத்தப்படுவதையும் கண்டித்துள்ளது.

## வீதியில் சென்ற மக்கள் மீது படையினர் சூடு; மூவர் பலி

மட்டக்களப்பில் நாவற்குடா ஏறாவூர் பகுதிகளில் வீதியில் சென்ற பொது மக்கள் மீது படையினர் மேற்கொண்ட சரமாரியான சூட்டில் 3 பொது மக்கள் பலியாகினர் சின்ன ஊரணி எனும் பகுதியில் பொலிஸார் நேற்று முன்தினம் நடத்திய சூட்டில் பொதுமகன் ஒருவர் பலியானார்

பலியாகும் பொதுமக்களின் அடையாள அட்டைகளை படையினர் எடுத்து சென்று விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## யாழ். விவசாயிகளுக்கு பயிர்க் காப்புறுதி திட்டம்

பயிர்க்காப்புறுதி செய்யும் யாழ் மாவட்ட விவசாயிகள் கமநல சேவை சிரேஷ்ட ஆணையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

கொழும்பில் இருந்து பயிர்க் காப்புறுதித் திட்டம் வழங்குவதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக அவ்வட்டாரம் மேலும் தெரிவித்தது.

தென் பகுதியில் தற்போது விவசாயிகளுக்கு காப்புறுதி வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிந்ததே. 47

### காகிதாதிகள் அனுப்பப்பட்டன

க. பொ. த. உயர்தர பரீட்சைக்குரிய காகிதாதிகள் மற்றும் பரீட்சை ஆவணங்கள் என்பன நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தால் சகல கோட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ் கல்வித் திணைக்கள வட்டாரம் தெரிவித்தது.

இவை அறுபத்தேழு பரீட்சை மண்டபங்களுக்கு அங்கிருந்து அனுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது 47

### விடுமுறை

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக இன்று 31 ஆம் திகதி மூடப்படும் என அறிவிக்கப்படுகிறது ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி மூன்றாம் தவணைக்காக மீண்டும் பாடசாலைகள் ஆரம்பமாகும் எனவும் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. (47, 12 07)

வளலாய்...

பலாலி சூட்டுச் சத்தங்களும் ஷெல் சத்தங்களும் கேட்ட வண்ணமிருந்தன,

இச்சமயம் வானை இரைச்சலும் இடையிடையே கேட்டது,

வழமையை விட மேற்படி இரவு கேட்ட இச்சத்தத்தால் அச்சுவேலிப்பகுதி மக்கள் பரபரப்படைந்து காணப்பட்டனர் நேற்று அதிகாலை வரை சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன 43

மாதயாத்திரை -

அனுரா பண்டாரநாயகவும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது எனவும் தெரிகிறது

### திருமதி சிறிமாபண்டார நாயக

இந்த எதிர்ப்பு போராட்டத்தில் ஓர் அங்கமாக ஆகஸ்ட் மாதம் பன்னிரண்டாம் திகதி 1980 ஜூலை வேலை நிறுத்தம் செய்தோரின் நினைவாக நூறு பொதுக் கூட்டங்களை நடத்தி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக உத்தேசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விமானம், கப்பல் மூலம் அகதிகள் அழைத்துவரப்படுவர்

அகதிகளை அனுப்புவது தொடர்பாக இந்தியாவுடன் அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் இணக்கம் கண்டுள்ளதாக அவ்வமைப்பு ஸ்ரீலங்கா அரசுக்கு அறிவித்துள்ளதாக புனர்வாழ்வு அமைச்சின் செயலர் கிரிஸ்ரி சில்வா நேற்று தெரிவித்தார்,

விமானம் மூலம் முதற்தடவையாக 5 ஆயிரம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் கொண்டுவரப்படுவர். இதையடுத்து ஆகஸ்ட் 10 முதல் எம். வி. இராமனுஜம் என்ற கப்பல் மூலம் மன்னாரைச் சேர்ந்தவர்கள் மன்னாருக்கு அழைத்துவரப்படுவர் எனவும் கிறிஸ்ரி சில்வா மேலும் தெரிவித்தார்.

## கொழும்பு பயணிகள் யாழ். வருகின்றனர்

கடும் காற்று காரணமாக கிளாலி படகுச்சேவை பாதிக்கப்பட்டதை அடுத்து கொழும்பில் இருந்து வந்த பயணிகள் பலர் கிளிநொச்சியில் தங்கியிருந்தமை தெரிந்ததே

தற்பொழுது படகுச்சேவை ஆரம்பமானதை அடுத்து நேற்று அதிகாலை பெரும் தொகையான பயணிகள் கிளாலி ஊடாக யாழ்ப்பாணம் வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது

இதேபோல நேற்றும் பல நூற்றுக்கணக்கான கொழும்பு பயணிகள் இப்பாதையூடாக பயணம் செய்ய சென்றதை காணமுடிந்தது 47

## ஜனாதிபதி வெளிநாட்டு பயணவிவரம் அறிவிப்பு

தற்போதைய சார்க் அமைப்பின் தலைவரான ஜனாதிபதி பிரேமதாஸ செப்டெம்பர் 23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை உறுப்பு நாடுகளான பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்

தொடர்ந்து ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் 06 ஆம் திகதி வரை பிரேமதாஸ இந்தியா, பூட்டான், பங்களாதேஷ் நாடுகளுக்கு பயணம் செய்வார் ஒக்டோபர் 10 ஆம் திகதி அவர் மாலை தீவுக்கு பயணமாவார் எனத் தெரிவிக்கப்படுகிறது

ஜனாதிபதி பதவி ஏற்று கடந்த 3 வருடங்களாக பிரேமதாஸ எந்த வெளிநாட்டு பயணத்தையும் மேற்கொள்ளவில்லை என்பது தெரிந்ததே

## விதை உருளைக்கிழங்கு கடன் அடிப்படையில் கிடைக்கும்

யாழ் மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி கொழும்பில் இருந்து விதை உருளைக்கிழங்கை தருவிக்க யாழ் அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

உருளைக்கிழங்கு விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயிகளின் பெயர்ப்பட்டியலை உடன் யாழ் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கமநல சேவை ஆணையாளரை அரச அதிபர் கேட்டுள்ளார்.

உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் இவை வழங்கப்படும் எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி கலவியங்காடு, யாழ்ப்பாணம் லெட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 31 07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது